| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **41/2009** |
| **தேதி** | **:** | **01.07.2025** |
| **பெயர்** | **:** | **செல்வமணி த/பெ. பரமசிவம்** |

பி.வா.த.சா.1. / (DW1) திரு. செல்வமணி த/பெ. பரமசிவம் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

**பி.வா.த.சா.1/ (DW1) - சாட்சி மீண்டும் அழைத்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

1) வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் புலன் எண்கள் தெரியுமா என்றால் தெரியும். புல எண் 79/1B1ல் 87 சென்ட் வாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஆனால் பட்டாவில் கொஞ்சம் குறைவாக உள்ளது. B அட்டவணை சொத்தில் புல எண் 80/1A2 ல் 6 சென்ட் வாதிக்கு உரிமையானது என்றால் சரிதான். ஆனால் பட்டாவில் விஸ்தீரணம் குறைவாக உள்ளது. அதே போன்று நிலத்திலும் 6 சென்ட் பரப்பளவு குறைவாக உள்ளது.

2) இவ்வழக்கில் வாதி வழக்கறிஞர் ஆணையரை நியமித்து தாவா சொத்துக்களை அளவீடு செய்தார என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் வழக்கறிஞர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த அறிக்கை படி தாவா சொத்தில் பரப்பளவுகள் குறைவாக இருப்பது காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மீது நான் எந்தவிதமான ஆட்சேபனையும் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

3) புல எண் 79/1B1ல் சொத்திற்கு எனக்கு எந்த திசையில் உரிமை உள்ளது என்றால் வடக்கு பக்கத்தில் உரிமை உள்ளது. புல எண் 80/1A2 ன் சொத்திற்கு எனக்கு எந்த திசையில் உரிமை உள்ளது என்றால் கிழக்கு பக்கமாக உள்ளது. வழக்கு

சொத்துக்களின் நான்கு பக்க எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். B அட்டவணை சொத்திற்கு நான்கு பக்க எல்லைகள் பின்வருமாறு தெற்கு பக்கம் நாகலிங்கம் இடமும், மேற்கு பக்கம் காசிலிங்கம் என்பவரின் இடமும், வடக்கு பக்கம் மாதா நகர், கிழக்கு பக்கம் புல எண் 80/1A2 என்ற நிலம் உள்ளது.

4) A அட்டவணை சொத்திற்கான நான்கு பக்க எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். அந்த நான்கு பக்க எல்லைகள் பின்வருமாறு வடக்கு பக்கத்தில் புல எண் 79/1B2 இடமும், அதன் பின்னர் புல எண் 80/1A2 என்ற நிலம் தொடங்குகிறது, தெற்கு பக்கம் ஏரிக்கால்வாய், மேற்கு பக்கம் புல எண் 79/1A1 மற்றும் புல எண் 79/1A2 நிலமும், கிழக்கு பக்கம் புல எண் 79/1C, புல எண 79/1D ஆகிய நிலங்கள் உள்ளது. மேலே சொன்ன நான்கு பக்க எல்லைகள் விவரம் தவறானது என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கு உரிமையானது என்று நான் தெரிவித்திருப்பதால் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு எனக்கும் வாதிக்கும் தாவா சொத்து சம்பந்தமான இடத்தகறாறு ஏற்பட்டு என்னுடைய சொத்துக்கு நில அளவு செய்து அளவுக்கல் நடப்பட்டது என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டு நான் என்னுடைய மனையை அளந்து கல்நட்டது தவறு என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2009 ம் ஆண்டு வாதி என்னுடைய மனையை அளவீடு செய்து கல் நட்டதாக புகார் கொடுத்தார் என்றால் போலிவார் என்னை அது சம்பந்தமான விசாரிக்கவில்லை அதனால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) வாதியின் இடத்தில் அத்துமீறி நான் செல்லக்கூடாது என்று உறுத்துக்கட்டளை வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் என்றால் சரிதான். அதனால் நான் வழக்கு மூலங்களை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தான் என் மீது வழக்கு மூலம் இல்லாமல் பொய்ய இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2009 ம் ஆண்டு நான் வாதியின் இடத்தில் அத்து மீறி நில அளவுக்கல் நட்டதால் தான் வாதி என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் வாதியின் மீது எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

7) நான் அதிகாரத்தை தவறுதலாக பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் வாதிக்க கிடைக்கத்தக்கது என்றால் வாதி என் மீது தேவை இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதனால் கிடைக்கத்தக்கதல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**சாட்சி கையொப்பம் - Sd/. செல்வமணி.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.M. Kalimuthuvel,
District Munsif,
Sriperumbudur.